www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

**சித்திரக்கலை - I**
**Art - I**

**Gr. 12 (2023)**

**Three Hours**

சுட்டெண் : ...................................

**அறிவுறுத்தல்கள் :**

❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி - I
- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

பகுதி - II
- மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
- அ பகுதியிலிருந்து இரு வினாவும்,ஆ,இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.
- பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி – I

- ***1 தொடக்கம் 5 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்து அதன் விடை இலக்கத்தை புள்ளிக்கோட்டில் இடுக.***

1) கிரேக்க தொல்சீர் யுகத்துக்குரிய சிலை
   (1) குரோஸ்
   (2) லவக்கூன்
   (3) வெற்றித் தேவதை
   (4) இறக்கும் காலத்தியன்
   (5) ஹர்மீசும் டயோனியசும் (…..)

2) அனுராபுர ஆட்சிக்காலத்தின் மிகச்சிறந்ததொரு நிர்மாணிப்பான அவுக்கன புத்தர் சிலை யினால் எடுத்துக்காட்டப்படுவது.
   (1) பல்லவர்களின் கலைப் பண்புகளாகும்
   (2) குப்தர்களின் கலைப் பண்புகளாகும்
   (3) அமராவதி கலைப் பண்புகளாகும்
   (4) மதுர கலைப் பண்புகளாகும்
   (5) காந்தார கலைப் பண்புகளாகும் (…..)

3) பொலநறுவையின் "கல்விகாரை" அல்லது "உத்தராராமய"
   (1) கற்குன்றொன்றினைப் பயன்படுத்தி நிர்மாணிக்கபட்ட விகாரையாகும்
   (2) மலைக்குன்றுகளைக் குடைந்து சிலைகள் நிர்மாணிக்கபட்டுள்ளதோர் இடம்.
   (3) நின்ற நிலை, இருந்த நிலை சிலைகளைக் காணக்கூடியதோர் இடமாகும்.
   (4) நிலப்பாறையில் செதுக்கப்பட்ட நான்கு சிலைகளை காணக்கூடியதோர் இடமாகும்.
   (5) பராக்கிரமபாகுவினால் அமைக்கப்பட்ட சிறந்த சிமைனையாகும். (…..)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

4) சங்கநிதி பதமநிதி ஆகிய உருவங்களைக் கொண்ட காவற்கல் காணக்கிடைப்பது
   (1) தூபாராமவில் ஆகும்
   (2) லங்காராமையில்
   (3) அபயகிரித் தூபியில் ஆகும்
   (4) மெதிரிகிரிய வட்டதாகேயில் ஆகும்.
   (5) லங்காதில சிலைமனையிலாகும் (…..)

5) அஜந்தாவின் பத்மபாணி போதிசத்துவரின் உருவத்தின் மூலம் எடுத்துக்காட்டப்படுவது.
   (1) காருண்யப் பண்புடன் கூடிய இளமைப் பருவமாகும்.
   (2) அஜந்தா கலைஞரின் மனித உருவங்களை நிர்மாணிக்கும் ஆற்றலாகும்.
   (3) தேவலோகத்திலுள்ள போதிசத்துவராவார்.
   (4) மானிட உலகில் பிறந்த போதிசத்துவ சித்தார்த்தராவார்
   (5) புத்தபெருமானின் ஞான நிலையாகும் (…..)

❖ **6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான உருக்களை 1 - 7 வரையான நிழல்படங்களிலிருந்து தெரிவு செய்து அதன் விடை இலக்கத்தை புள்ளிக்கோட்டில் இடுக.**









| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|

**6)** மாலாதார வடிவத்தை எடுத்துக் காட்டும் வடிவம்.
   (1) 1 (2) 2 (3) 5 (4)6 (5) 7 (…..)

**7)** தெதிகம கெட்ட விகாரைக்கு சொந்தமான படைப்பு.
   (1) 1 (2) 3 (3) 7 (4) 5 (5) 4 (…..)


8) மூல வடிவம் வெங்கலத்தில் ஆக்கபட்டதாக கருதப்படும் கிரேக்க நாகரிகத்திற்குரிய வடிவம்.
   (1) 2 (2) 3 (3) 4 (4) 7 (5) 1 (…..)

9) நடனக்கலையை சிறப்பாக வெளிப்படுத்தும் வடிவங்கள்.
   (1) 1,2 (2) 2,3 (3) 2,6 (4)1,6 (5) 2.4 (…..)

10) இந்திய தொன்மைனான நாகரிகத்திற்குரிய படைப்பு.
   (1) 1 (2) 2 (3) 7 (4) 5 (5) 4 (…..)

- **வினா இல 11 - 15 வரை கீழே தரப்படும் $P, Q, R, S, T$ எனப்படும் நிழற்படங்கள் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக் கோட்டில் இடுக.**




| P | Q | R | S | T |
|---|---|---|---|---|



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

11) சோமபந்து வித்தியாபதியின் பெல்லன்வில விகாரையில் வரையப்பட்ட P எழுத்தினால் காட்டப்பட்டுள்ள உருவம்,
   (1) இயற்கையான இயல்புகளுக்கமைய உருவாக்கப்பட்ட மனித உருவாகும்.
   (2) இயற்கையான மனித உருவத்தின் அடிப்படை மாதிரி கலைப் பண்புடன் தொகுக்கப்பட்டுள்ளதாகும்.
   (3) அரச பதவியைக் காட்டுவதற்காக நிர்மாணிக்கப்பட்டதாகும்.
   (4) நடனப்பாங்கை எடுத்துக்காட்டும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
   (5) ரம்மியமான மனித உருவமொன்றை நிர்மாணிக்க எடுக்கப்பட்ட முயற்சியாகும். (..........)

12) எழுத்து Qவினால் காட்டப்பட்டுள்ள பொலன்னறுவையின் கட்டடக்கலை நிர்மாணிப்பு.
   (1) பழமையான பௌத்த கட்டடமொன்றின் இடிபாடுகளாகும்.
   (2) ஒன்றிலிருந்து மன்றொன்று சிறிதாக அமையும் விதத்தில் கட்டப்பட்ட மாடிக் கட்டடமாகும்.
   (3) பழையான மாடிக் கட்டடமொன்றின் எஞ்சிய பகுதியாகும்.
   (4) பழமையான அரச ஞாபகார்த்தச் சின்னமாகும்.
   (5) செங்கற்களினால் ஆக்கப்பட்ட அரியதொரு தூயியாகும். (..........)

13) R எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியத்தை வரைந்தவர்.
   (1) மனப்பதிவுவாதியான குளோட் மொனே
   (2) பிற்பட்ட மனப்பதிவுவாதியான வின்சன்ட் வான்கோ
   (3) பிற்பட்ட மனப்பதிவுவாதியான போல் கோகான்
   (4) மனப்பதிவுவாதியான எட்வர்ட் மனே
   (5) பிற்பட்ட மனப்பதிவுவாதியான போல் செசான் (..........)

14) S எழுத்தினால் காட்டப்பட்டுள்ள எகிப்திய சிற்பமானது.
   (1) தெய்வீகப் பண்புகள் உள்ளடக்கப்பட்ட பாரா அரச வம்சத்ததைச் சேர்ந்த அரச குடும்ப சிலையாகும்.
   (2) மரபுரீதியான, யதார்த்த பண்புகளைச் சித்தரிக்கும் சிலையாகும்.
   (3) பழைய இராசதானிக் காலத்திற்குரிய மென்குரேயும் அவரது மனைவியும் சிலையாகும்.
   (4) பழைய இராசதானிக் காலத்திற்குரிய ஆடைகள், தலைப்பாகை ஆகியவற்றுடன் கூடிய சிலையாகும்.
   (5) தாடி குறிப்பிடப்பட்டுள்ளமையால் எகிப்திய சிற்பங்களிடையே மிகச் சிறப்பானதொரு சிலையாகும். (.......)

15) T எழுத்தால் காட்டப்பட்டுள்ள வட்ட அமைப்புடைய செதுக்கல் தகட்டில்,
   (1) புத்தபெருமான் வணங்கச் செல்லும் அனேபிட்டு சிடானனும் பக்தர்களும் காணப்படுகின்றனர்
   (2) அனேபிட்டு சீடன் ஜேதவனப் பூங்காவை புத்தபெருமானுக்கு பூஜை செய்யும் தன்மை காணப்படுகிறது.
   (3) அனேபிட்டு சீடனனால் சவத் நகரில் விகாரை ஒன்றைக் கட்டுவிக்கும் தன்மை காணப்படுகிறது.
   (4) அனேபிட்டு சீடன் துன்பப்படுவோருக்கு தானம் வழங்கும் சந்தர்ப்பம் சித்தரிக்கப்படுகிறது
   (5) சவத் நகர ஜேதனராமைக்குச் செல்லும் பக்தர்கள் காணப்படுகின்றனர். (..........)

- ***16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைக் கீழே தரப்பட்டுள்ள A, B, C, D, E எனக் காட்டப்பட்டுள்ள சிற்பங்களிலிருந்து தெரிவு செய்க.***



**A**



**B**



**C**



**D**



**E**

16) A எழுத்தால் காட்டப்பட்டுள்ள சிலை.
   (1) பொலனறுவை அலாகன பிரிவெனா வளவினுள் காணப்படுகின்ற சிலையாகும்.
   (2) பொலனறுவை கல்விகாரையின் சமாதி புத்தர் சிலையாகும்.
   (3) பொலனறுவை பபலு விகாரைக்கு அண்மையில் அமைந்துள்ள புத்தர் சிலையாகும்.
   (4) பொலனறுவை வட்டதாகேயில் காணப்படுகின்ற புத்தர் சிலையாகும்.
   (5) பொலனறுவை லங்காதிலகவுக்கு அண்மையில் காணக்கூடியதான சிலையாகும். (.......)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

17) *B* எழுத்தால் காட்டப்பட்டுள்ள தர்மசக்கர முத்திரையுடன் கூடிய காந்தார தேசத்தில் கிடைக்கப்பெற்ற புத்தர் சிலை.
(1) தக்திபஹீ புத்தர் சிலையாகும்.
(2) ஹோட்டி மந்தார் புத்தர் சிலையாகும்.
(3) பிரெகம் புத்தர் சிலையாகும்.
(4) கத்ரா புத்தர் சிலையாகும்.
(5) சஹ்ரி பக்லொல் புத்தர் சிலையாகும் (.......)

18) *C* எழுத்தால் காட்டப்பட்டுள்ள ஐரோப்பியக் கலை வரலாற்றில் அதி சிறந்த நிர்மாணிப்பான இது,
(1) கிரேக்க மேன்மைக் காலத்தில் பூரணப்படுத்தப்பட்ட சிலையாகும்.
(2) கிரேக்க ஹெலனிஸ்ரிக் காலத்தில் பூரணப்படுத்தப்பட்ட சிலையாகும்.
(3) கிரேக்க சிற்பக் கலைஞர் பீடியஸ் இன் நிர்மாணிப்பாகும்.
(4) உரோமச் சிற்பிகள் கிரேக்க ஆக்கங்களைப் பின்பற்றிய ஒரு சந்தர்ப்பமாகும்.
(5) யுத்த வெற்றியை நினைவுகூரும் பொருட்டு செய்யப்பட்ட கிரேக்கச் சிலையாகும். (.......)

19) *D* எழுத்தால் காட்டப்படும் சிலை பிரதிபலித்து அரசனை எனவும், கையில் தாங்கி இருக்கும் பொருள் அரசைக் குறிக்கும் குறியீடு எனவும் கருத்து வெளியிட்டவர்.
(1) கலாநிதி பரனவிதான அவர்கள் ஆவார்.
(2) ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் ஆவார்.
(3) போகலட பண்டிதர் ஆவார்.
(4) H.C.P பெல் அவர்கள் ஆவார்.
(5) சிறிகுணசிங்க அவர்கள் ஆவார். (.......)

20) E எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிந்துவெளி நாகரிகத்தில் கிடைக்கப்பெற்ற முத்திரையின் மூலம் கருதப்படுவது.
(1) சிந்துவெளி மக்கள் சிவ வணக்கத்தை மதிப்புக்குரியதாகக் கருதியமையாகும்.
(2) மிருக வடிவங்கள் புனிதமாகதாகக் கருதப்பட்டமையாகும்.
(3) ஓர் இனக் குழுவை அடையாளம் காட்டுவதன் பொருட்டு ஆபரணமாக அணிந்துள்ளமையாகும்.
(4) சிந்துவெளி மக்கள் முத்திரைகளை வணங்கினர் என்பதற்கானதோர் எடுத்துக்காட்டாகும்.
(5) இவ் வடிவ முத்திரைகள் வியாபாரப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதனையாகும். (......)

- ***21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைக் கீழே தரப்பட்டுள்ள U, V,W,X,Y ஆகிய செதுக்கல்களிலிருந்து தெரிவு செய்க.***



**U**



**V**



**W**



**X**



**Y**

21) எழுத்து U இன் மூலம் காட்டியுள்ள இராணி மாளிகை எனவும் அறியப்படும் மகாசென் மாளிகையின் சந்திர வட்டக்கல்.
(1) சிறுபுடைப்புச் செதுக்கல்களில் ஒன்று.
(2) பிராணிகளின் உருவங்கள் உள்ளடக்கி செதுக்கப்பட்ட செதுக்கல்
(3) சலனம், ரிதம், மென்மையான பூரணப்பாட்டைக் கொண்ட செதுக்கல்
(4) அரைவட்டக் கருங்கல் தகட்டுச் செதுக்கல்.
(5) கற்சிற்பியின் சிறப்பான நிர்மாணிப்பு (…...)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

22) எழுத்து V இனால் காட்டப்படும் பாரதத்தின் (இந்திய) செதுக்கல் கலையின் மேன்மையை வெளிக்காட்டும் இச் செதுக்கல்.
(1) பாருத் ஸ்துாபத்தின் கல்வேலியில் காணப்படும்.
(2) அமராவதி ஸ்துாபத்தின் கல்வேலியில் காணப்படும்.
(3) சாஞ்சி ஸ்துாபத்தின் தோரணத் துாணியில் காணப்படும்.
(4) சாஞ்சி துாபத்தின் கல்வேலியில் காணப்படும்.
(5) அஜந்தா குகை உள்வாசல் துாணில் காணப்படும். (……..)

23) எழுத்து W இனால் காட்டப்படும் செதுக்கல்களுடன் கூடிய வாகல்கடம் கிடைப்பது.
(1) மிரிசவட்டிய சைத்தியத்தில் (2) ருவான்வெலிசாயவில்
(3) அபயகிரி சைத்தியத்தில் (4) மிகிந்தலை கண்டக சைத்தியத்தில்
(5) ஜேதவனராம சைத்தியத்தில் (…….)

24) எழுத்து X காட்டப்பட்டுள்ள கட்டடக்கலை மாதிரியினால் காட்டப்பட்டுள்ள தேவாலயம்.
(1) நைல் நதிக் கரையில் ஹோரஸ் கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(2) தீபசில் நிர்மாணிக்கப்பட்ட லக்ஸோர் தேவாலயமாகும்.
(3) அமொன் கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கர்ணாக் தேவாலயமாகும்.
(4) ராம்ஷஸ் அரசனால் நைல் நதிக்கரையில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(5) மத்திய ராசதானிக் காலத்தில் எகிப்தில் நிர்மாணிக்கப்பட்டதாகும். (…..)

25) எழுத்து Y காட்டப்பட்டுள்ள செதுக்கலைக் காணக்கிடைப்பது,
(1) இசுறுமுனியவின் 'ரன்மசு' பூங்காவில் அமைந்துள்ள பாறையில் ஆகும்.
(2) இசுறுமுனியவில் இயற்கையாக அமைந்துள்ள பாறையின் மேற்பகுதியில் ஆகும்.
(3) 'ரன்மசு' பூங்காவிலுள்ள தடாகமொன்றிற்கு அருகில் ஆகும்.
(4) இசுறுமுனிய தடாகத்துக்கருகில் இயற்கையாக அமைந்துள்ள பாறையில் ஆகும்.
(5) இசுறுமுனிய அரும்பொருட்காட்சியத்தில் ஆகும். (……)

- ***26 தொடக்கம் 30 வரையாக ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

26) சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட முண்டப்படிமமானது.
(1) சிவப்புச் சுண்ணக்கல்லில் செதுக்கப்பட்ட மனித அளவிலானதொரு சிலையாகும்.
(2) முழுமையான, யதார்த்தபூர்வமான உடலம்சங்களை நேர்த்தியாகப் பூரணப்படுத்தியுள்ள ஒரு சிலையாகும்.
(3) சமய தத்துவமொன்றினால் உருவான பாவம் நிறைந்ததொரு சிலையாகும்.
(4) இந்து சமயப் பூசகரொருவர் சித்தரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) மொசப்பத்தேமிய பண்புகளைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டதாகும். (……..)

27) இத்தாலிய மறுமலர்ச்சிக் கலைஞர்கள்,
(1) மனித உருவை யதார்த்தமாகச் சித்திப்பதில் நிபுணத்துவம் மிக்கவர்கள்
(2) கோடுகளையும் வர்ணங்களையும் சமனிலையில் கொண்டு ஓவியங்களை வரைந்தனர்.
(3) சிலை நிர்மாணிப்பதை விட ஓவியங்களை வரைவதில் திறமையானவர்களாவார்.
(4) யதார்த்த கலைக் கோட்பாடுகளைச் சிறப்பாக மேம்படுத்தினர்.
(5) கோட்பாடுகளைப் பயன்படுத்தி கருத்து வெளிப்பாட்டு மனித உருவங்களை வரைவதில் தேர்ச்சி மிக்கவர்களாவர். (………. )

28) எட்காட் டெகாசின் 'குளியல் பேசின்' என்ற ஓவியம்.
(1) நடிகைகளின் பல்வேறு அசைவு நிலைகள் தொடர்பாகச் செய்யப்பட்ட ஓவியச் சித்தரிப்பாகும்.
(2) முப்பரிமாண இயல்புகளை வெளிப்படுத்தும் விதத்தில் ஒளியும் இருளும் பயன்படுத்தப் பட்டுள்ளதாகும்.
(3) யதார்த்தவாத வெளிப்பாட்டின் போது மனித உருவங்களை வரையும் கலைஞரின் ஆற்றலை எடுத்துக்காட்டுவதாகும்.
(4) இயற்கையான மனித உருவத்தை யதார்த்தமாகப் பயன்படுத்தியுள்ளமையாகும்.
(5) வர்ணத்துக்கும் ஒளிக்குமான தொடர்பு பற்றிய பஸ்ரல் ஊடகத்தினால் செய்யப்பட்டதோர் ஆய்வு முயற்சியாகும். (……..)

29) தபுசு பல்லூகா வியாபாரிகள் புத்தபெருமானுக்கு தானம் வழங்குவதை சித்தரிக்கும் ஓவியம்.
(1) வெஸ்ஸகிரியாவில் வரையப்பட்டுள்ளது. (2) ஹிந்தலையில் வரையப்பட்டுள்ளது.
(3) மிகுந்தலையில் வரையப்பட்டுள்ளது. (4) மகியங்கணையில் வரையப்பட்டுள்ளது
(5) சிகிரியாவில் வரையப்பட்டுள்ளது. (……..)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

30) கிரேக்க பாத்தினன் ஆலயம்.
(1) கிரேக்கத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயமொன்றாகும்.
(2) கிரேக்கத்தில் காணக்கிடைக்கும் அயோனிக் மரபுக்குரியதொரு பீடமாகும்.
(3) கிரேக்கத்தின் அதென்ஸ் நகரத்திலமைந்துள்ள அயோனிக் தேவாலயமாகும்.
(4) டொரிக் தூணினால் அலங்கரிக்கப்பட்ட பழமையானதொரு தேவாலயமாகும்.
(5) மிகப்பெரிய தூண்களின் மீது கட்டப்பட்ட கிரேக்கத்தின் பழமையானதொரு தேவாலயமாகும்.

(........)

❖ ***31 தொடக்கம் 35 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளின் உருவப் படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.***



31) அருகில் காட்டப்பட்டுள்ள சாஞ்சி சிற்பத்தினால் சித்தரிக்கப்படுவது,
(1) ஐட்டில தமனய ஆகும் (2) மகாகபி ஜாதகக் கதையாகும்
(3) நிரஞ்சனா நதியாகும். (4) கபிலவஸ்து புரமாகும்
(5) ஜேதவன வழிபாட்டுத்தலமாகும்.

(…..)



32) அருகில் காட்டப்பட்டுள்ள இந்தியச் சிலையானது
(1) சாராணாத் குருகுலத்திற்குரிய தொரு ஆன்மீகப் பண்புகளைச் சித்தரிக்கும் சிலையாகும்.
(2) செதுக்கலுடன் கூடிய ஒளிவட்டத்தைக் கொண்ட சிலையாகும்.
(3) ஆன்மீகப் பண்புகளைச் சித்தரிக்கும் சாராணாத் இருந்த நிலை சிலையாகும்.
(4) ஆன்மீகப் பண்புகளைச் சிறப்புற வெளிப்படுத்தும் பெறுமதி வாய்ந்ததொரு சிலையாகும்.
(5) சாராணாத் குருகுலத்திற்குரிய தர்மத்தைப் போதிக்கும் விதத்தைச் சித்தரிக்கும் புத்தர் சிலையாகும்.

(…….)



33) அருகில் காட்டப்பட்டுள்ள மட்பாண்டம்
(1) கிரேக்க காலத்திற்குரியது.
(2) எகிப்திய காலத்திற்குரியது
(3) சிந்துவெளி காலத்திற்குரியது.
(4) உரோமானிய காலத்திற்குரியது.
(5) அனுராதபுர காலத்திற்குரியது.

(……..)



34) அருகில் காட்டப்பட்டுள்ள ஓவியம்.
(1) வான்கோவின் படைப்பாகும்.
(2) செசானின் படைப்பாகும்
(3) கொகானின் படைப்பாகும்
(4) பிக்காசோவின் படைப்பாகும்.
(5) மேரி கசற்றின் படைப்பாகும்.

(……)



35) அருகில் காட்டப்பட்டுள்ள ஓவியம்.
(1) கனவடிவ வாதக் கலைஞர் ஜோர்ஜ் பிராக்கின் நிர்மாணிப்பாகும்.
(2) கனவடிவ வாதக் கலைஞர் பிக்காசோவின் நிர்மாணிப்பாகும்.
(3) அருபவாத சிற்பக் கலைஞரான ஒகஸ்தே ரொடீனின் நிர்மாணிப்பாகும்.
(4) மனப்பரிவு வாதியான எட்கா டெகாவின் நிர்மாணிப்பாகும்.
(5) மனப்பதிவு வாதியான குளோட் மொனேயின் நிர்மாணிப்பாகும்.



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

- **வினா இல 36 - 40 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் சித்திரத்தைப் பயன்படுத்தி விடைகளைத் தெரிவு செய்க.**



36) இங்கு காணப்படும் ஓவியம்
(1) அகவய யதார்த்த வாத ஓவியமாகும்
(2) அருபவாதச் சித்திரமாகும்
(3) கன வடிவவாதச் சித்திரமாகும்
(4) மனப்பதிவு வாதச் சித்திரமாகும்.
(5) பிற்பட்ட மனப்பதிவு வாதச் சித்திரமாகும் (…..)

37) இச்சித்திரம் வரையப்பட்டது.
(1) எட்வேட் மனேயினால் (2) கமிளி பியாறோவினால் (3) கிளோட் மொனேயினால்
(4) எட்கா டெகாவினால் (5) பியறே ஒகஸ்ட் றெனோவினால் (…..)

38) இச்சித்திரத்தின் தலைப்பாக அமைவது
(1) நீர் அல்லிகளும் வோற்றலு பாலமும்
(2) நீர் அல்லிகளும் யப்பானிய பாலமும்
(3) பாலமும் நீர்த்தடாகமும்
(4) லில்லி மலர்களும் பாலமும்
(5) இயற்கையும் செயற்கை அழகும் (…..)

39) இச்சித்திரத்தை வரையும் பொழுது கலைஞரின் எண்ணமாக இருந்தது.
(1) நீா நிறைந்த சூழலின் தன்மையை இயற்கையாக வெளிப்படுத்தல்.
(2) சூரியனுக்கு இயற்கை சூழல் ஏற்படுகின்ற துலங்கலை நுணுக்கமாக சித்திரமாக வெளிப்படுத்தல்.
(3) நீரின் மீது சூரிய ஒளி விழுந்துள்ள தன்மையை வெளிப்படுத்தல்.
(4) சூரிய ஒளி விழுவதனால் நீர் மற்றும் தாவரங்களில் மாறுபடுகின்ற தன்மையைக் காட்டுதல்.
(5) இயற்கை செயந்கைச் சூழலை அழகைச் சித்திரமாக்கல். (…..)

40) இச் சித்திரம் தற்கால விமர்சகர்களின் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றதற்கான காரணம்.
(1) நீரின் மீது சூரிய ஒளி விழுகின்ற தன்மை இரசனையுடன் வெளிப்படுத்தப்பட்டிருப்பதால்
(2) சூரிய ஒளியில் உடனடியாக ஏற்படுகின்ற மறுபாடுகளின் இயல்பைப் புதிய தன்மையில் ஓவியமயமாக்கப்பட்டுள்ளமையால்.
(3) நிலத்தோற்றத்தில் வெளிப்படுகின்ற அழகைக் கடும் வர்ணத்தின் தடிப்பான தூரிகைத் தடங்கள் மூலம் சித்திரமாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி என்பதனால்.
(4) கலைக் கூடத்திலிருந்து வெளிப்பட்டு இயற்கைத் தன்மைகளின் உண்மையை ஆராய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி என்பதனால்.
(5) இயற்கை காட்சி பற்றிய கலைஞரின் உள்ளத்தில் உருவான சௌந்தரியம் யதார்த்த முறையில் சித்திரத்தில் வரையப்பட்டுள்ளமையால்.

(…..)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி - II

- பகுதி II மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
- அ பகுதியிலிருந்து இரு வினாவும்,ஆ,இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

### உப பகுதி 'அ'

### (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

***1) அநுராதபுரக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட புத்தர் சிலை நிர்மாணிப்புக் கலை பொலன்னறுவையையும் கடந்து கண்டிக் காலத்தினுள் நுழையும் பொழுது பாரிய மாற்றங்களுக்குட்பட்டது.***

(i) பொலநறுவையில் கிடைக்கப்பெற்ற நேராக நிற்கும் மெய்நிலையற்ற நின்ற நிலை புத்தர் சிலைகள் இரண்டின் பெயர்களை குறிப்பிடுக?. *(2 புள்ளிகள்)*

(ii) அவுக்கன புத்தர் சிலையில் வெளிப்படுகின்ற வெளிப்புறப் பண்புகள் பற்றி அறிமுகஞ் செய்க? *(5 புள்ளிகள்)*

(iii) பொலநறுவைக் கல்விகாரை இருந்தநிலை சிலையினதும், கம்பளை இலங்காதிலக இருந்த நிலை புத்தசிலையினதும் வெளிப்புறப் பண்புகளையும், ஆத்மீக குணப்பண்புகளையும் ஒப்பீட்டு ரீதியாக விளக்குக? *(8 புள்ளிகள்)*

**2)அநுராதபுரக் காலத்து சித்திரக் கலை மரபுகள் பொலநறுவை கால சித்திரக் கலை மரபுகளில் செல்வாக்கு செலுத்தியுள்ளது.**

(i) அநுராதபுரக் காலத்திற்குரிய பௌத்த ஓவியங்களைக் காணக்கூடிய இடங்கள் இரண்டினை பெயரிடுக? *(2 புள்ளிகள்)*

(ii) திம்புலாகலவில் காணக்கூடிய பொலன்னறுவைக்கால சித்திரங்கள் தொடர்பாகச் சுருக்கமாக அறிமுகம் செய்க? *(5 புள்ளிகள்)*

(iii) பொலன்னறுவையின் திவங்க சிலைமனையின் ஓவியத்துக்காகத் தெரிவு செய்யப்பட்ட தொனிப் பொருள் மகாயான கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சுருக்கமான விவரணம் தருக? *(8 புள்ளிகள்)*

***3) 18 ஆம் நூற்றாண்டில் மலைநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஓவியக்கலைப் பாரம்பரியம் முன்னய ஓவியப்பாரம்பரியத்தில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக அமைந்தது.***

(i) மெதவல விகாரையில் காணப்படும் இரண்டு சித்திரங்களை குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

(ii) கண்டிய (மலையக) ஓவியக்கலைஞர்கள் ஜாதகக் கதைகளை வரையும் பொழுது பயன்படுத்திய இரேகைப் பயன்பாடுகள், வர்ணப் பயன்பாடுகள் பற்றிச் சுருக்கமாக அறிமுகஞ்செய்க. *(5 புள்ளிகள்)*

(iii) தம்புள்ள விகாரை ஓவியங்களில் காணப்படும் விசேட அம்சங்களை மதிப்பீடு செய்க. *(8 புள்ளிகள்)*



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**உப பகுதி 'ஆ'**

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)**

**4) சாஞ்சி, பாருத் வேலைப்படுகளை காட்டிலும் தரமான வேலைகளை அமராவதி வேலைப்பாட்டில் காணலாம்.**

(i) சாஞ்சி செதுக்கலில் காணப்படும் ஜாதகக்கதை செதுக்கல்கள் இரண்டு தருக தருக? (2புள்ளிகள்)

(ii) புத்தசரிதையை சாஞ்சி ,பாருத் கலைஞர்கள் வெளிப்படுத்திய தன்மையை சுருக்கமாகத் தருக? (5 புள்ளிகள்)

(iii) பாருத் தூபியின் வட்டமான பதக்க அமைப்புடைய தட்டில் காணப்படும் "மகாகபி ஜாதகதையை வெளிக்காட்டும் செதுக்கலுக்கும், அமராவதி கல்வேலியில் கிடைத்த (நாலாகிரி தமனய) "நாலாகிரி யானையை அடக்குதல்' எனும் செதுக்கலுக்கும் இடையே காணப்படுகின்ற ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டு ஆராய்க. (8 புள்ளிகள்)

**5) பாரதத்தின் முக்கியமாக பௌத்த விகாரைத் தொகுதியான அஜந்தா பௌத்த சித்திரக்கலை நிர்மாணிப்புக்களில் சிறப்புற அமையப்பெற்ற கலை நிலையமாகும்.**

(i) அஜந்தாவின் மகாயான குகைகளில் கிடைக்கப்பெற்ற இரண்டு ஓவியங்களைப் பெயரிடுக? (2 புள்ளிகள்)

(ii) அஜந்தா ஓவிய நிர்மாணிப்பின் மேற்பரப்பை தயாரித்த உபாயங்களைச் சுருக்கமாக விளக்குக? (5 புள்ளிகள்)

(iii) அஜந்தா ஓவியங்களின் சித்திர ஒருங்கிணைப்பு, உணர்ச்சி வெளிப்பாடு, கலைத்துவ பண்பகளை விமர்சிக்குக? (8 புள்ளிகள்)

**உப பகுதி 'இ'**

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)**

**6) சுயாதீனக் கலைஞர்களின் புதிய தேடலின் விளைவு மனப்பதிவு வாதத்தின் தோற்றமாகும்.**

(i) எட்காட் டெகாசின் இரு ஓவியங்களைத் தருக? (2 புள்ளிகள்)

(ii) மனப்பதிவு வாத ஓவியங்களின் பண்புகளை சுருக்கமாகக் குறிப்பிடுக? (5 புள்ளிகள்)

(iii) கிளொட் மொனேயின் றோவுன் தேவாலாயம் என்ற ஓவியத்தில் காணப்படும் மனப்பதிவு வாத பண்புகளை மதிப்பிடுக? (8 புள்ளிகள்)

**7)19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வின்சற் வான்கோ, ஹொகான்,போல் செசான் ஆகியோர் ஒரே கலைத் துறையைப் பின்பற்றிய ஓவியர்களாக கருதப்படலாம்.**

(i) போல் செசான் வரைந்த இரு ஓவியங்களை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) ஹொகானின் மஞ்சள் யேசுநாதர் என்ற ஓவியத்தின் பண்புகளை சுருக்கமாக மதிப்பிடுக. (5 புள்ளிகள்)

(iii) 'உருளைக் கிழங்கை உண்பவர்கள் (Potato eateres) நட்சத்திர இரவுகள் (The starry Night) என்பன வான்கோவின் இரு கலைப்படைப்புக்களாகும். அவற்றின் கலை இலட்சணங்கள் சார்பாக இரு ஓவியங்களுக்கு இடையிலான அடிப்படை வேறுபாடுகளை விமர்ச்சிக்குக (8 புள்ளிகள்)



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

**சித்திரக்கலை - II**
**Art - II**

**Gr. 12 (2023)**

**Three Hours**

**அறிவுறுத்தல்கள் :**

- ✶ **உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.**
- ✶ **விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையயளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.**

**இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள் கூட்டமும்**

**கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன் கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந்தீட்டுக.**

- கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
- பொருட்களினதும் செடி / கிளையினதும் இயல்பு, வெளிப்புறத்தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, மற்றும் தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன கவனத்திற் கொள்க.
- பொருள் தொகுதி உமக்குத் தெரிகின்ற தன்மையில் வரைந்து, அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற்கொண்டு வர்ணந்தீட்டுக.
- வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.
- பொருள் தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.
- பொருள் தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
- நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)



சித்திரக்கலை - II
Art - II

Gr. 12 (2023)

மேற்பார்வையாளருக்குரியது

நிலைப்பொருட்கூட்ட வரைதல்



ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்கள்

1. பெட்டி
2. கண்ணாடிப்போத்தல்
3. சீத்தை துணி
4. செவ்வரத்தன் பூவுடன் கிளை
5. உரித்த தேங்காய்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

சித்திரக்கலை - III
Art - III

Gr. 12 (2023)

Three Hours

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

**அறிவுறுத்தல்கள்**

- கீழே தரப்பட்டுள்ள அ, ஆ, இ ஆகிய பகுதிகளிலிருந்து ஒரு பகுதியை மாத்திரம் தெரிவு செய்க. அதிலிருந்து ஒரு தலைப்பை மட்டும் தெரிவு செய்து வர்ணச்சித்திரம் ஒன்றை வரைக.
- உமது பரீட்சை சுட்டெண்ணையும் தெரிவு செய்த விரைவின் இலக்கத்தையும் தாளில் பின்புறத்தில் இடது பக்க மூலையில் தெளிவாக எழுதுக.
- விரும்பிய வர்ண ஊடகம் (ஒன்றுக்கு மேற்பட்ட வர்ண ஊடகங்கள் கலந்தும்) பயன்படுத்தலாம்.

அ, ஆ, இ ஆகிய பகுதிகளில் இருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்து செய்க.

### பகுதி அ சித்திர ஒழுங்கமைப்பு

1. சமய ஊர்வலத்தில் பக்தி
2. திறந்த வெளியொன்றில் மதிய உணவருந்தும் குழுவினர்
3. கரையில் காணப்படும் படகொன்றை திருத்தும் பணியில் ஒரு குழுவினர்
4. குளமொன்றில் நீர் அருந்தும் மந்தைகள்

### பகுதி ஆ அலங்கார ஆக்கம்

5. மரபுரீதியான அலங்கார அலகுகளை பயன்படுத்தி மரத்தினால் ஆன பூச்சாடியொன்றை செதுக்குவதற்குப் பொருத்தமான அலங்காரமொன்றைத் திட்டமிட்டு வர்ணந்தீட்டுக.
6. 3 அடி விட்டமான மேசையொன்றுக்கு விரிப்பதற்கு பொருத்தமான சதுர வடிவ மேசை விரிப்பிற்கான முழுத்தள அலங்காரமொன்றை நிர்மாணிக்குக.
7. பிராணிகளின் மூட்டற்ற உருவங்களைக் கொண்டு பத்திக் முறையில் வர்ணமிடத்தக்க 3X2அடி அளவிலான சுவர் அலங்காரமொன்றை நிர்மாணிக்குக.

### பகுதி இ கிறபிக் சித்திரம்.

8. “காட்டூன் ஓவியர்’ என்ற சுயசரிதை நூலொன்றுக்கான அழகிய மேலட்டை யொன்றை நிர்மாணிக்குக.
9. ஆயுள்வேத பற்பசை வைப்பதற்கான பெட்டியொன்றிற்குரிய அலங்கார மொன்றை திட்டமிட்டு, அதற்கு பொருத்தமான பெயரொன்றையும் இடுக.
10. “பிளாஸ்ரிக் பாவனையை தவிர்ப்போம் ” என்ற தலைப்பில் அழகிய சுவரொட்டி ஒன்றை நிர்மாணிக்குக.



agaram.lk